### மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னிலை! இரா.துரைராஜ் எம்.சி. தலைமை!

# சைதை கிழக்குப் பகுதி சார்பில் கலைஞர் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## சே.மெ.மதிவதனி – வழக்கறிஞர் அலிம் அல்புகாரி சிறப்புரை!






சென்னை,ஜுன் 17-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாள் விழாவையொட்டி 13.06.2026 அன்று மாபெரும் பொதுக்கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மேனாள் அமைச்சர் மா. சுப்பிரமணியன் முன்னிலையில், 13-வது மண்டலக்குழு தலைவர் சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா. துரைராஜ் தலைமையில் நடைபெற்றது.

திராவிட கழக துணை பொது செயலாளர் சே.மெ. மதிவதனி, வழக்கறிஞர் அலிம் அல்புகாரி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

இதில் துணை மேயர் மு. மகேஷ்குமார்.எம்சி, 10-வது மண்டலக்குழு தலைவர்- சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் எஸ். குணசேகரன், பாலவாக்கம் மு. மனோகரன், வேளச்சேரி. எஸ். பாஸ்கரன் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், ஆர். கிருஷ்ண குமார், மாமன்ற உறுப்பினர் தா. மோகன்குமார், பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு. பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் நேருநகர் எஸ் பாட்சா, வே. முருகன், நா. ராதாகிருஷ்ணன், எல். ரோக்கியராஜ், சைதை ஆ. வரதன், க. மணி, கோட்டூர் கோ சண்முகம், மாவட்ட பிரதிநிதி கள் வழக்கறிஞர் க. உமாபதி, வே.ரமேஷ்குமார், டி.வி. நரசிம்மன், இரா.சுதாபிரியன், நந்தகோபால், ஏ. மஜித், எஸ்.ஜே.சலாம், ந.பாபு, மகேஷ் லாரண்ஸ், முன்னிலையில், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் தி. கோகுலன் அவர்கள் நன்றியுரையாற்றினார்! மேலும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் நா.மணிகண்டன், ஆர்.டி.மூர்த்தி, ஆர்.சங்கர், மோ.எழில் எஸ்.ஜெ. அன்புரோஸ் பு. ஜவஹர்தீன் மு.முருகன் கே.எஸ்.பாபு ஆர்.செல்வம் என்.சுதாகர், க.வேல்முருகன், விக்டர் பென்னிகிளெமெண்ட் எஸ்.ஏ. மோகன் குமார் ச.புவனேஸ்வரி அ.பார்வதி பேன் பேட்டை வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.


### திருவள்ளூர் மாவட்டம் – வெங்கல் அருகே

# விவசாயி வீட்டில் 60 சவரன் நகை, ரூ.5 லட்சம் கொள்ளை!

## த.வெ.க. ஆட்சியில் தொடரும் கொள்ளைச் சம்பவங்களால் சட்டம் - ஒழுங்கு கேள்விக்குறி; பொதுமக்கள் கடும் எதிர்ப்பு!

திருவள்ளூர், ஜுன் 17-

திருவள்ளூர் மாவட்டம் வெங்கல் அருகே அத்தங்கிகாவனூர் கிராமத்தில் 76 வயது முதிய விவசாயியின் வீட்டில் நள்ளிரவில் புகுந்த மர்ம நபர்கள் சுமார் 60 சவரன் தங்க நகைகள் மற்றும் ரூ.5 லட்சம் ரொக்கத்தை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



அத்தங்கிகாவனூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கோபால் நாயுடு (76), அவரது மனைவி கௌசல்யம்மாள் (68) ஆகியோர் வீட்டில் தனியாக வசித்து வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது, வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்த மர்ம நபர்கள் பீரோவை உடைத்து ரூ.5 லட்சம் ரொக்கம் மற்றும் பூஜை அறையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 50 சவரன் தங்க நகைகளை கொள்ளையடித்தனர். மேலும், கௌசல்யம்மாள் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 10 சவரன் தங்க நகையையும் பறிக்க முயன்றபோது அவர் கூச்சலிட்டதால் கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

தகவலறிந்த வெங்கல் காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தடய அறிவியல் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் உதவியுடன் விசாரணை மேற்கொண்டனர். சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து மர்ம நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, மாநிலத்தில் சட்டம்ஒழுங்கு நிலை குறித்து பொதுமக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளன. "த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கொள்ளை, சங்கிலி பறிப்பு, வழிப்பறி உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. குற்றவாளிகள் மீது அச்சமின்றி செயல்படும் சூழல் உருவாகியுள்ளது. பொதுமக்கள் தங்களது வீடுகளிலும் பாதுகாப்பாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்று குற்றம்சாட்டியுள்ளன.

மேலும், "மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதே அரசின் முதல் கடமை. ஆனால் சட்டம் ஒழுங்கை வலுப்படுத்துவதை விட விளம்பரங்கள் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

குற்றங்களைத் தடுக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து, இரவு நேர ரோந்துப் பணியை தீவிரப்படுத்தி, குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் "தொடர்ந்து நடைபெறும் குற்றச் சம்பவங்கள் காரணமாக மக்கள் மத்தியில் பாதுகாப்பு குறித்த அச்சம் அதிகரித்து வருவதாகவும், சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க அரசு உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### வழித்தடப் பிரச்சினையில் இருதரப்பினர் இடையே மோதல்:

# பெண்ணின் முடியைப் பிடித்து த.வெ.க. பிரமுகர் கொடூரமாகத் தாக்கும் வீடியோ வைரல்!

ஓமலூர், ஜுன் 17 -

ஓமலூர் அருகே வழித்தட பிரச்சினையில், இருதரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலில், பெண் ஒருவரை த.வெ.க. பிரமுகர் கொடூரமாகத் தாக்கும் வீடியோ, சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சேலம் மாவட்டம், ஓமலூர் அடுத்த அமரகுந்தியை சேர்ந்த விவசாயி அருணாச்சலம் (62). இவருக்கும், பக்கத்து வீட்டில் வசிக்கும் முத்தண்ணன் குடும்பத்தினருக்கும் இடையே, நீண்ட காலமாக வழித்தட பிரச்சினை இருந்து வந்தது.



இந்நிலையில், அருணாச்சலம் தனது நிலத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அப்போது பாறைகள் உடைந்த துகள்கள் மற்றும் தூசி, முத்தண்ணனின் வீட்டின் மேல் படிந்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த முத்தண்ணன், அவரது தந்தை பரந்தாமன், சகோதரர் சந்திரமோகன் மற்றும் குடும்பத்தினர், அருணாச்சலம் மற்றும் அவரது மனைவி வசந்தாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றி, அவர்களை சரமாரியாக தாக்கினர். இதற்கு பதிலடியாக அருணாச்சலம் தரப்பினரும், முத்தண்ணன் குடும்பத்தினரை தாக்கினர். இந்த மோதலில் இருதரப்பினரும் காயமடைந்து, சிகிச்சைக்காக சேலம் மற்றும் ஓமலூர் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலின் போது, முத்தண்ணன், பெண்ணின் தலைமுடியை கொத்தாக பிடித்துக் கொண்டு, முகத்திலேயே கொடூரமாக தாக்கும் வீடியோ காட்சிகள் இணையத்தில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து இருதரப்பினரும் அளித்த புகாரின் பேரில், தொளசம்பட்டி போலீசார் இருதரப்பை சேர்ந்த 8 பேர் மீது வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முத்தண்ணனின் தந்தை பரந்தாமன், அ.தி.மு.க. கிளை செயலாளராக உள்ளார். ஆனால், முத்தண்ணன் சமீப காலமாக த.வெ.க.வுக்கு ஆதரவாக செயல்பட்ட புகைப் படங்கள் வெளியாகியுள்ளது.

### பேர்ணாம்பட்டு முன்னாள் எம்.எல்.ஏ.

# அ.சின்னசாமி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜுன் 17 –

பேர்ணாம்பட்டு தொகுதி முன்னாளர் சட்டமன்ற உறுப்பினர் அ.சின்னசாமி மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

பேர்ணாம்பட்டு சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. அ.சின்னசாமி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அன்னாரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், பேர்ணாம்பட்டு தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வென்ற அவர், அத்தொகுதி மக்களுக்காகக் குரலெழுப்பிப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தியவர். அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கழகத் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# கூட்டணியாரே... கொஞ்சம் பதற்றத்தைக் குறையுங்கள்!

அரசியலில் நிலைப்பாடுகளோ கூட்டணிகளோ மாறுவது புதிதல்ல. ஆனால் அதற்கான குறைந்தபட்ச நியாயங்கள் ஏதும் இல்லாவிட்டால் அதைப் பச்சோந்தித்தனம் என்றோ ஆதாய அரசியல் என்றோதான் கூறமுடியும். இன்று த.வெ.க. கூட்டணியில் இருக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொரு நாளும் தி.மு.க.விற்கு எதிராக கூறிவரும் கருத்துக்கள் அறம் பிறழ்ந்த அரசியலின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. காங்கிரஸ் தி.மு.க.விற்கு இழைத்த துரோகம் வெளிப்படையானது. தி.மு.க.வின் முதுகில் ஏறி சவாரி செய்து ஒரு நாடாளுமன்ற இடத்தையும் ஐந்து சட்டமன்ற இடங்களையும் பெற்றுக்கொண்டு அடுத்த நாளே த.வெ.க.விடம் மண்டியிட்டு இடம்பிடித்தார்கள். அதற்கான கண்டனத்தை இந்தியா கூட்டணி யிலிருக்கும் பல கட்சிகளிலிடமிருந்து ராகுல் காந்தி சந்தித்து வருகிறார். தி.மு.க.விற்கு காங்கிரஸ் இழைத்த துரோகம் 'இந்தியா' கூட்டணியை சிதைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இடதுசாரிகள் 'இந்தியா' கூட்டணியை உடைத்து த.வெ.க.விடம் போய் கூட்டணி வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் கேரளாவில் பினராயி விஜயனுக்கு எதிராக ராகுல் காந்திதான் அமலாக்கத்துறை சோதனையைத் தூண்டினார் என்று 'இந்தியா' கூட்டணி கூட்டத்தில் கொந்தளிக்கிறார்கள். அதாவது தமிழ்நாட்டில் த.வெ.க. காங்கிரஸ் கூட்டணி மந்திரி சபைக்கு ஆதரவு, கேரளத்தில் எதிர்ப்பு.

ஆனால் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போன காங்கிரஸைவிட சொல்லிவிட்டுப் போன கட்சிகளின் நடத்தைதான் கேலிக்கூத்தாக இருக்கிறது. தி.மு.க. தலைவர் அனுமதி அளித்தால்தான் த.வெ.க.விற்கு ஆதரவு அளிப்போம் என்றெல்லாம் பேசிய இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் இன்றைய கூட்டணி அமைச்சர் ஷாஜகான் அடுத்த ஐம்பது வருடத்திற்கு தி.மு.க. துடைத்து எறியப்படும் என்று பேசுகிறார். ஐம்பது வருடத்திற்கு மேலாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கை தாங்கிப்பிடித்து தமிழ்நாட்டில் அதனை ஒரு கட்சியாக உயிரோடு வைத்திருந்தது தி.மு.க. ஒவ்வொரு தேர்தலிலும் தி.மு.க. கூட்டணி உடன்படிக்கையை அறிவிக்கும்போது முதலில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்குடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம்தான் முதலில் அறிவிக்கப்படும். கலைஞர் காலத்திலிருந்து கடந்த சட்டமன்றத் தேர்தல்வரை இதுதான் வழக்கம்.



**மனுஷ்ய புத்திரன்**
*மாநில ஆலோசகர்*
*தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி*

ஆனால் 'அந்த சோஃபாவில்' அமர்ந்ததும் என்ன மாயமோ தெரியவில்லை அதன் மந்திரசக்தியால் நேற்றுவரை அவ்வளவு உற்ற நண்பர்களாக இருந்தவர்கள் மனம் பிறழ்ந்து நிலை தடுமாறி விதவிதமாய் பேசுகிறார்கள். ஒரு மாநிலத்தில் ஒரு மந்திரி பதவி இவ்வளவு மயக்கத்தை கொடுக்கும் என்றால் பாஜகவுடன் போய் கூட்டணி வைத்திருந்தால் மோடி தேசிய அளவிலான பதவிகளைக் கொடுத்திருப்பார்.

வி.சி.க. தலைவர் திருமாவளவன் ஒவ்வொரு நாளும் கூட்டணி குறித்து கூறிவரும் கருத்துக்கள் குழப்பமானவை மட்டுமல்ல அவர் ஏதோவொரு குற்றவுணர்வுக்கு ஆட்பட்டிருப்பது போல் தெரிகிறது. யாருடைய நிர்ப்பந்தத்தாலோ முரண்பட்ட கருத்துக்களை கூறிவருகிறார்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய திருமாவளவன் பின்வரும் கருத்தை கூறினார். "த.வெ.க.வுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கும் விவகாரத்தில் திமுகவும் நெகிழ்வுத்தன்மையுடன் இருந்தது எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'நம் கூட்டணிக்கு ஆதரவானவர்கள்தான் த.வெ.க.வை எதிர்த்து வாக்களித்துள்ளனர். எனவே, த.வெ.க.வுக்கு வி.சி.க., இடதுசாரிகள் ஆதரவு தரக்கூடாது' என தி.மு.க. கூறியிருக்க வேண்டும். ஆனால், தி.மு.க. அதை செய்யவில்லை.

'ஏற்கெனவே இடதுசாரிகள் வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளன. திருமாவளவனும் அதே முடிவை எடுப்பது எந்த நேரத்திலும் பிரச்சினைதான். திடீரென ஆதரவை அவர் திரும்பப் பெற்றால் என்ன செய்வது. ஆதரவு அளிப்பதாக கூறிக்கொண்டே தி.மு.க. கூட்டணியில் தொடர்வதாக அவர் பேசுகிறாரா' என்றெல்லாம் தவெகவினர் கவலை கொண்டனர். த.வெ.க.வின் சந்தேகத்தை போக்கத்தான் ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்தோம், அதற்கு பரிசாக த.வெ.க. அமைச்சரவையில் எங்களுக்கு இடம் தரப்பட்டது.

எந்த சூழ்நிலையில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் த.வெ.க. அரசிற்கு ஆதரவளிப்பதை தி.மு.க. தலைவர் ஏற்றுக்கொண்டார் என்பது அனைவருக்கும் தெரியும். எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் தமிழ்நாட்டில் கவர்னர் ஆட்சி வந்துவிடும், அது பா.ஜ.க.வின் நேரடி ஆட்சியாக அமைந்துவிடும் என்ற சூழல் நிலவிய போது அதிக இடங்களை பெற்றிருந்த த.வெ.க. அரசிற்கு வெளியே இருந்து ஆதரவளிக்கும் முடிவிற்கு தி.மு.க. தலைவர் ஒப்புதல் அளித்தார். தி.மு.க. தலைவரின் சம்மதத்துடன் வெளியே நின்று ஆதரவளிப்பதாக சொல்லிவிட்டு போனவர்கள் ஒவ்வொருவராக த.வெ.க. மந்திரி சபையில் போய் அமர்ந்தது மட்டுமல்லாமல் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் முடிவையும் அறிவித்தார்கள். த.வெ.க. அரசை ஆதரித்தாலும் தி.மு.க. கூட்டணியில்தான் நீடிக்கிறோமென்று ஒரு நாள் சொல்லுவார்கள் மறுநாள் இப்போதுள்ள சூழலில் தி.மு.க. கூட்டணி யில் நீடிக்க முடியாது என்று கூறுவார்கள்.

திருமாவளவன் ஒருபடி மேலே போய் தாங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுவிட்டதாலேயே தவெக கூட்டணியில் இருக்கிறோம் என்று பொருளல்ல என்கிறார். இவ்வளவையும் எந்தத் தயக்கமும் இன்றிச் செய்துவிட்டு தி.மு.க. தலைவர் த.வெ.க.விடம் நெகிழ்வுத் தன்மையுடன் இருந்தாராம், அது திருமாவளனுக்கு அதிர்ச்சி அளித்ததாம். யாரை சந்தோசப்படுத்த இந்த அவதூறு திருமா அவர்களே? இதையெல்லாம் பார்த்து அதிர்ச்சியடைய வேண்டியது தி.மு.க.வே தவிர திருமாவளவன் அல்ல.

த.வெ.க. அரசை வெளியே இருந்து ஆதரிக்கப் போனவர்கள் உள்ளே போய் உட்கார்ந்துகொண்டு தி.மு.க. தலைவர் எங்களை தடுத்திருக்க வேண்டுமென்று சொன்னால் என்ன வகையான நிலைப்பாடு இது ?

"த.வெ.க.வின் சந்தேகத்தை போக்கத்தான் ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்தோம், அதற்கு பரிசாக த.வெ.க. அமைச்சரவையில் எங்களுக்கு இடம் தரப்பட்டது." என்றால் இந்தக் கூட்டணி எத்தகைய பரஸ்பர நம்பிக்கையில் அமைந்திருக்கிறது? மந்திரி சபைக்குள் போனால்தான் தங்கள் கற்பை நிரூபிக்க முடியும் என்ற அவல நிலையில் விசிக இருந்ததா?

திருமாவளவன் தி.மு.க. தலைவர்பற்றி பதிவுசெய்யும் இன்னொரு கூற்றையும் பாருங்கள். "தி.மு.க., அ.தி.மு.க. இணைந்து ஆட்சியமைப்பது குறித்து ஒரு கருத்து நிலவுவதாக தி.மு.க. தலைவர் எங்களிடம் கூறினாரே தவிர, தி.மு.க., அ.தி.மு.க. இணைந்து ஆட்சியமைக்கலாம் என கூறவில்லை."

ஆனால் இதற்குமுன் 'தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி பற்றி உங்களிடம் யாரும் பேசினார்களா என்று திருமாவிடம் கேட்டபோது 'தி.மு.க. தலைமையில் இருந்து அப்படி யாரும் பேசவில்லை. இரண்டாம் கட்டத் தலைவர்களிடையே அப்படி ஒரு பேச்சு அடிபடுவதாக கேள்விப்பட்டதாக' கூறுகிறார். இரண்டில் எது உண்மை? ஏன் இத்தனை தடுமாற்றங்கள் ?

பொதுவாக அரசியல் தலைவர்கள் தனிப்பட்ட உரையாடல்களை மேற்கோள் காட்ட மாட்டார்கள். ஏனெனில் அதற்கு சான்றுகள் ஏதுமில்லை. அதோடு தனிப்பட்ட உரையாடலில் சொன்னதாக மனம்போன போக்கில் மாற்றி மாற்றி பேசிக்கொண்டே இருந்தால் நாளை எந்த தலைவரும் உரையாடவே அஞ்சுவார்கள். அது மிகப்பெரிய நம்பகத்தன்மையின்மையை ஏற்படுத்தும்.

விஜய், பா.ஜ.க. கூட்டணியிலிருக்கும் அ.தி.மு.க. ஆதரவை கோராமல் தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஆதரவை கோரியதால் அவரது மதச்சார்பற்ற நிலையை ஆதரித்து தாங்கள் த.வெ.க.வை ஆதரித்ததாக திருமாவளவன் வியாக்கி யானம் கூறுகிறார். விஜய் மதச்சார்பற்ற கட்சிகளின்மேல் அவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தால் எல்லா கட்சித் தலைவர்களையும் போய் பார்க்கும்போது அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை தவிர்த்துவிட்டு அங்கே கலகம் செய்துவரும் எஸ்.பி.வேலுமணியை ஏன் போய் சந்தித்தார்? பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வென்ற அ.ம.மு.க. வேட்பாளரை ஏன் குதிரை பேரத்தில் வாங்கினார். வேலுமணி கோஷ்டி த.வெ.க. அரசிற்கு ஆதரவாக நம்பிக்கை வாக்கெடுப்பில் வாக்களித்ததும் நான்கு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் போய் இணைந்ததும் எந்த மதச்சார்பின்மையை வலுப்படுத்த ?

திருமாவளவன் அவர்கள் அதிகாரத்தில் பங்கேற்க விரும்புவதில் தவறில்லை. ஆனால் ஒரு மந்திரி சபை இடத்திற்காக த.வெ.க. விற்கு தகுதியற்ற சான்றிதழ்களை வழங்குவதும் வந்தே மாதரத்தில் தொடங்கி ஊரக வேலை வாய்ப்பு திட்டம் வரை ஒன்றிய அரசிடம் ஒடுங்கிப்போய் நிற்கும் த.வெ.க. அரசின் தோல்விகளுக்கு முட்டுக்கொடுப்பதும் பரிதாபகரமானது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என்ற எல்லையைத் தாண்டியும் அனைத்து தரப்பு மக்களின் மதிப்பை பெற்றவர் திருமாவளவன். ஆனால் இன்று த.வெ.க. தமது பாசிச கோர முகத்தை மறைக்க திருமாவளவனையும் இடதுசாரிகளையும் ஒரு முகமூடியாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. திருமாவளவனுக்கோ இடதுசாரி தலைவர்களுக்கோ தாங்கள் எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றி எந்தக் கவலையும் இல்லை,

**திருமாவளவன் அவர்கள் 'நாங்கள் எந்த நேரத்திலும் த.வெ.க. அமைச்சரவையில் இருந்து வெளியேறுவோம் என்கிறார். திருத்திக் கொள்ளுங்கள் நீங்கள் எந்த நேரத்திலும் த.வெ.க. அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படலாம். உங்கள் கூற்று உங்கள் நிச்சயமின்மையையே வெளிப்படுத்துகிறது.**

### தி.மு.க. ஆட்சியில் வழங்கியதை கொண்டு வரவைத்து அலைக்கழிப்பு:

# 3 சக்கர வாகனங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி மீண்டும் வழங்கிய த.வெ.க. அமைச்சர்!

## இதுதான் மாற்றமா? என மாற்றுத்திறனாளிகள் கேள்வி!

வேலூர், ஜுன் 17 –

வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் அரசின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. கலெக்டர் லீலா அலக்ஸ் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளர்களுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனங்களை வழங்கினார். இந்த வாகனங்கள் கடந்த 4 மாதங்களுக்கு முன்னரே தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நலத்திட்ட உதவிகளை அதிகாரிகள் வழங்கியதாக தெரிகிறது. அதனை மாற்றுத்திறனாளிகள் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வேலூர் மாவட்டத்திற்கு அமைச்சர் வருகிறார் என்பதற்காக, ஏற்கனவே ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட மூன்று சக்கர வாகனங்களை பெற்ற பயனாளிகளை, மீண்டும் கலெக்டர் அலுவலகத்திற்கு அழைத்து வந்து புதிய பயனாளிகளுக்கு வழங்கியதை போல், த.வெ.க. அரசின் ஸ்டிக்கரை ஒட்டி வழங்கினர். அதனை பெற்ற மாற்றுத்திறனாளிகள் 4 மாதங்களுக்கு முன்னரே வாகனம் வழங்கி விட்டதாகவும் தற்போது அழைத்து அலைக்கழிப்பதாகவும் அதிருப்தியை வெளிப்படுத்தினர். தவெக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் இதுதானா? எனவும் கேள்வி எழுப்பினர். இதுபற்றி அமைச்சர் விஜய் பாலாஜியிடம் நிருபர்கள் கேட்டதற்கு 'இப்போது நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள், அது குறித்து விசாரிக்கிறேன். அப்படி ஏதாவது இருந்தால் நடவடிக்கை எடுக்க சொல்கிறேன்' என்றார்.